


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (5.11.2025) தலைமைச் செயலகத்தில், வி.எம்.எஸ். சுபகுணராஜன் அவர்களால் தொகுக்கப்பட்டு, ஆர்.விஜய சங்கர் அவர்களால் மொழிபெயர்க்கப்பட்ட, தந்தை பெரியார் அவர்கள் சாதி ஒழிப்பு மாநாடுகளில் ஆற்றிய உரைகளின் ஆங்கில மொழிபெயர்ப்பு நூலான “CASTE and the CRISIS of DIGNITY: Periyar EV Ramasamy Speaks at Caste Association Meetings and Caste Abolition Conferences 660” வெளியிட, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பெற்றுக்கொண்டார். இந்நிகழ்வின்போது, அமைச்சர்கள் துரைமுருகன், முனைவர் டி.ஆர்.பி.ராஜா மற்றும் மாநில திட்டக் குழு துணைத் தலைவர் பேராசிரியர் ஜெ.ஜெயரஞ்சன், வி.எம்.எஸ். சுபகுணராஜன் மற்றும் ஆர்.விஜய சங்கர் ஆகியோர் உடனிருந்தனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (5.11.2025) தலைமைச் செயலகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் 23 கோடி ரூபாய் செலவில் தரை மற்றும் நான்கு தளங்கள் கொண்ட புதிய மருத்துவக் கட்டடம் கட்டப்பட்டு, 225 படுக்கை வசதிகளுடன் மேம்படுத்தப்பட்ட திருச்செங்கோடு அரசு மருத்துவமனையை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# வேலூரில் மினி டைடல் பூங்கா!... முதல் பக்கத் தொடர்ச்சி

**வேலூர் மினி டைடல் பூங்கா திறந்து வைத்தல் மற்றும் நாமக்கல் மினி டைடல் பூங்கா அடிக்கல் நாட்டுதல்**

முதலமைச்சர் அவர்களால் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டுள்ள வேலூர் மினி டைடல் பூங்கா 32 கோடி ரூபாய் செலவில், தரை மற்றும் நான்கு தளங்களுடன், 60,000 சதுர அடி கட்டுமான பரப்பளவில், 600 தகவல் தொழில்நுட்ப வல்லுநர்கள் பணிபுரியும் வகையில், அனைத்து நவீன வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், முதலமைச்சர் அவர்களால் நேற்று முன்தினம் அடிக்கல் நாட்டப்பட்ட நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் மினி டைடல் பூங்கா 63,200 சதுர அடி கட்டுமானப் பரப்பளவில் சுமார் 600 தகவல் தொழில்நுட்ப வல்லுநர்கள் பணிபுரியும் வகையில் அதிநவீன வசதிகளுடன் அமைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்ச்சியின்போது, வேலூர் மினி டைடல் பூங்காவினை முழுமையாக குத்தகைக்கு எடுத்துள்ள M/s. AGS Health care நிறுவனத்திற்கு தள ஒதுக்கீட்டு ஆணையை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இந்த மினி டைடல் பூங்காக்கள் மூலம் வேலூர் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் வசித்துவரும் படித்த இளைஞர்களுக்கு, குறிப்பாக பெண்களுக்கு அவர்களின் சொந்த மாவட்டங்களிலேயே தகவல் தொழில்நுட்பம் சார்ந்த பணிகளில் வேலைவாய்ப்புகள் ஏற்படுவதுடன் அப்பகுதிகள் சமூக பொருளாதார வளர்ச்சி பெறவும், மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சி மேம்படவும் வழிவகுக்கும்.

இந்த நிகழ்ச்சியில், நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி. அருண் ராய், டிட்கோ மற்றும் டைடல் பார்க் மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (5.11.2025) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை திருக்கோயில்கள் சார்பில் நடத்தப்படும் அர்ச்சகர், ஓதுவார், தவில் மற்றும் நாதஸ்வரம், திவ்ய பிரபந்த பாடசாலை மற்றும் வேத ஆகம பாடசாலை ஆகிய 18 பயிற்சிப் பள்ளிகளில் முழு நேரமாக பயிற்சி பெறும் 297 மாணவ, மாணவியர்களுக்கு உயர்த்தப்பட்ட ஊக்கத்தொகை ரூ.10,000/ மற்றும் பகுதி நேரமாக பயிற்சி பெறும் 66 மாணவ, மாணவியர்களுக்கு உயர்த்தப்பட்ட ஊக்கத்தொகை ரூ.5,000/ ஆகியவற்றை வழங்கிடும் அடையாளமாக 10 மாணவ, மாணவியர்களுக்கு உயர்த்தப்பட்ட ஊக்கத்தொகைக்கான வங்கி வரைவோலைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி தலைமையில்

# நாமக்கல் மேற்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் அண்ணா அறிவகம்!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைத்தார்!

நாமக்கல், நவ. 7-

திருச்செங்கோட்டில் உள்ள நாமக்கல் மேற்கு மாவட்ட கழக அலுவலகம் தளபதி இல்லத்தில் பொது மக்களுக்கு எஸ்.ஐ.ஆர். வாக்காளர் படிவம் குறித்த சந்தேகங்களுக்கு விளக்கம் அளிக்க உதவிக்கான அலுவலகம் அண்ணா அறிவகம் திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

விழாவில் நாமக்கல் மேற்கு மாவட்ட திமுக செயலாளர் கே.எஸ்.மூர்த்தி தலைமை தாங்கினார். மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கலந்து கொண்டு அண்ணா அறிவகத்தை திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினர் ஈ.ஆர்.ஈஸ்வரன, நாமக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் வி.எஸ். மாதேஸ்வரன், தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அருள்ஜோதி, துணை ஒருங்கிணைப்பாளர்கள் பரசுராமன் கவிப்பிரியா, ஷேக் மீரான், வடிவேல், தினேஷ்குமார், நானா நானி கார்த்தி மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், திமுக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## மக்களின் வரிப் பணத்தில் இயங்கும் தேர்தல் ஆணையம்

# ‘மக்களாட்சி புதைக்கப்படவில்லை’ என்ற நம்பிக்கையை துளிர்க்க வைக்குமா?

### ராகுல்காந்தி எம்.பி. வெளியிட்ட ஆதாரங்களைச் சுட்டிக்காட்டி – முதல்வர் வலைதளப் பதிவு!

சென்னை, நவ.7 -

கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (05-11-2025) வெளியிட்டுள்ள சமூக வலை தளப் பதிவு வருமாறு:-

**திருடப்படும் மக்கள் தீர்ப்பு; வாய்திறக்காத தேர்தல் ஆணையம்!**

**அண்மைக்காலமாக பா.ஜ.க. பெற்று வரும் தேர்தல் வெற்றிகளின் உண்மைத்தன்மை குறித்து மீண்டுமொரு முறை பெரும் ஐயம் எழுகிறது. ஹரியானாவில் நடைபெற்றுள்ள வாக்குத் திருட்டு குறித்து எனது சகோதரரும், மக்களவை எதிர்க் கட்சித் தலைவருமான ராகுல்காந்தி அவர்கள் வெளியிட்டுள்ள ‘பச்சையான ஆதாரங்கள்’ அதிர்ச்சியூட்டுகின்றன.**

**வெறுப்பினை மூட்டி, பொய் வாக்குறுதிகளைக் கூறி 2014-இல் ஆட்சிக்கு வந்த பா.ஜ.க.வின் பிளவுவாத அரசியலை மக்கள் இனியும் நம்பத் தயாராக இல்லை என்ற நிலை எப்போதோ ஏற்பட்டுவிட்டது. ஆகையால் தேர்தலில் முறைகேடுகள் என்பதையெல்லாம் தாண்டி, வாக்காளர் பட்டியலிலேயே அப்பட்டமான அட்டூழியத்தை அரங்கேற்றி, மக்களின் ஜனநாயகத் தீர்ப்பைக் களவாண்டு, இன்று அம்பலப்பட்டு நிற்கிறது.**

**இதன் அடுத்தகட்டம்தான் SIR என்ற பெயரில் மக்களின் வாக்குரிமையைப் பறிக்கும் சதி என்பதற்கு பீகாரும், இன்று வெளியாகியுள்ள #HaryanaFiles-உமே சான்று!**

**இவை அனைத்துக்கும் பொறுப்பான தேர்தல் ஆணையம் இத்தனை குற்றச்சாட்டுகள், அடுக்கடுக்கான ஆதாரங்களோடு முன்வைக்கப்பட்டும் எந்த ஒரு முறையான விளக்கமும் அளிக்காமல் இருப்பது வேதனையளிக்கிறது. மக்களின் வரிப் பணத்தில் இயங்கும் தேர்தல் ஆணையம் மக்கள் மன்றத்தில் உரிய பதில் சொல்லி, இந்தியாவில் மக்களாட்சி முழுவதும் குழிதோண்டிப் புதைக்கப் படவில்லை என நம்பிக்கையைத் துளிர்க்க வைக்குமா?**

இவ்வாறு முதல்வர் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

## தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க சார்பில்

# “என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி” வாக்குச்சாவடி முகவர்கள், பூத் டிஜிட்டல் ஏஜெண்டுகள் ஆலோசனைக் கூட்டம்!

### அமைச்சர்கள் கே.என்.நேரு – முனைவர் கோவி.செழியன் பங்கேற்பு! துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. அறிக்கை!

தஞ்சாவூர், நவ. 7 -

தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் “என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச் சாவடி” வாக்குச்சாவடி முகவர்கள், பூத் டிஜிட்டல் ஏஜென்ட் ஆலோசனைக் கூட்டம் இன்று (07.11.2025) நடைபெற உள்ளதாக மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. அறிக்கை வெளியிட்டுள்ளார்.



அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு : -

கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் இன்று (07.11.2025 - வெள்ளிக் கிழமை) காலை 10.00 மணியளவில் தஞ்சாவூர் மஹாராஜா மஹாலில் கழகத் தலைவரின் சீரிய முன்னெடுப்பான “என் வாக்குச் சாவடி - வெற்றி வாக்குச் சாவடி” திட்டத்தின் நமது தஞ்சை மத்திய மாவட்டத்திற்குட்பட்ட திருவையாறு, தஞ்சாவூர், ஒரத்தநாடு ஆகிய சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடி முகவர்கள் (பி.எல்.ஏ2), பூத் டிஜிட்டல் ஏஜெண்ட் (பி.டி.ஏ) ஆகியோருக்கான ஆலோசனைக் கூட்டம் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கழக முதன்மைச் செயலாளர், மண்டலப் பொறுப்பாளர் அமைச்சர் கே.என்.நேரு, உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்ற உள்ளனர்.

அதுசமயம் இக்கூட்டத்திற்கு முன்னாள் - இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தொகுதி பார்வையாளர்கள், மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர்ச் செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், வார்டு, கிளைச் செயலாளர்கள், ஐ.டி. விங் நிர்வாகிகள், வாக்குச்சாவடி முகவர்கள், பூத் டிஜிட்டல் ஏஜென்ட் அனைவரும் தவறாது குறித்த நேரத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர் துரை. சந்திரசேகரன் எம்.எல்.ஏ. அறிக்கை வெளியிட்டுள்ளார்.

### தலைமைக் கழகம் அறிவிப்பு!

5.11.2025 அன்று முரசொலி நாளிதழில் வெளிவந்த தருமபுரி கிழக்கு மாவட்ட ஒன்றிய, நகர பிரிப்பு அறிக்கையில், பாலக்கோடு தெற்கு என்று அறிவிக்கப்பட்ட ஒன்றியம் “பாலக்கோடு கிழக்கு ஒன்றியமாக” மாற்றி அமைக்கப்படுகிறது.

``அண்ணா அறிவாலயம்”
சென்னை - 18.
நாள் : 06.11.2025.

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.



கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னையில் காணொளி காட்சி வாயிலாக, நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோட்டில் ரூ.23 கோடி மதிப்பில், மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு இணையாக அரசு மருத்துவமனையை பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், மாவட்ட ஆட்சித்தலைவர் துர்காமூர்த்தி ஆகியோர் தலைமை தாங்கி, பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினர். இந்நிகழ்ச்சியில் நாமக்கல் மேற்கு மாவட்டப் பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி, ஈ.ஆர்.ஈஸ்வரன் எம்.எல்.ஏ., வி.எஸ்.மாதேஸ்வரன் எம்.பி., நாமக்கல் மாவட்ட சுகாதாரத்துறை இணை இயக்குனர் டாக்டர் ராஜ்மோகன், மருத்துவ கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.கி.சாந்தாஅருள்மொழி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



தருமபுரி மேற்கு மாவட்டச் செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் அறிவுரைப்படி நடைபெற்ற BLA2 கூட்டத்தில் மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் மூத்த வழக்கறிஞர் டி.சந்திரசேகர் “என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி” பயிற்சி கூட்டத்தில் வழங்கிய ஆலோசனைகள் குறித்தும். Special Intensive Revision (SIR) திருத்தத்தை நடைமுறைபடுத்துவது குறித்தும் ஆலோசனைகள் வழங்கி பேசினார். கூட்டத்தில் தொகுதி பார்வையாளர் அரியப்பன், ஒன்றியச் செயலாளர்கள் எம்வீடி.கோபால், கண்ணபெருமாள், தருமபுரி மேற்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர் எஸ்.பரணிசக்தி, தேர்தல் பணிக்குழு செந்தில் மற்றும் ஒன்றிய நிர்வாகிகள் மற்றும் BLA2 வாக்குச் சாவடி முகவர்கள் கலந்து கொண்டனர்.